OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUL 1926

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

சுன்னத்து ஜமாஅத தாரின்;

மார்க்கத் தீர்ப்பு

இஃது

லக்னோ

அப்துல்ஹைய் மவுலானா மவுல்வி
அவர்களால் தீர்ப்பு செய்திருந்ததை,

கீரனூர் ஜமாத்தாரால் 1918 ௵ மதுரை ஸ்ரீ
மீனாம்பிகை பிரசில் பதிப்பிக்கப்பட்ட
பிரதிக் கிணங்க,

க. வெ. மைதீன் பாகூ ராவுத்தர்.
கபால்லாஹூ தஆபஹூ முன் வேண்டுகோள்
செய்திருந்தபடி

மவுல்வி நோ. பெ. ஷேக்முஹம்மது
ஆலீம் ஸாஹிபு அவர்களால்
பள்ளிபட்டி.

முஹம்மதியநேசன் அச்சுயந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.
1926

Q7
N26
174486

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

1, அல்லாவின் திருநாமத்தைக்கொண்டு துவக்கஞ் செய்கிறேன். ஷறஹுல் கபீர் 616-வது பக்கம் 21, 26 வரைவரி.

பள்ளியின் சட்டங்களை பேசுகிறபிரிவு

ஒரு மனிதன் பள்ளியைக்கட்டி அந்த அல்லாவுக்காக ஆக்கிவிட்டானேயானால் அவன் அந்த மஸ்ஜிதை மராமத்துச் செய்வதற்கும், அதைக் கட்டுவதற்கும், பாய்விரிப்புகள் விரிப்பதற்கும், விளக்குகள் போடுவதற்கும், பாங்கு காமத்துச் சொல்வதற்கும், இவன் லாயக்காயிருந்தால் அதில் இமாமத்துச் செய்வதற்கும் ரொம்ப பாத்தியமுள்ளவன். அப்படி லாயக்கில்லையானால் இந்த விஷயத்தில் அவன் அபிப்பிராயம் இதேவிதமாக மஸ்ஜிதைக் கட்டினவனுடைய பிள்ளையும், அவனுக்குப் பின்னால் அவனுடைய பிச்சளங்களும் மத்தவர்களைக்காண எத்தமானவர்களாக இருக்கும் மோதினையும் இமாமையும நேமிக்கிற விஷயத்தில் மஸ்ஜிதைக் கட்டினவன் தெருவுக்காரருடன் தர்க்கிட்டானேயானால் தெருவுக்காரனால் தெரிந்தெடுக்கப்பட்ட மனிதன் கட்டினவன் தெரிந்தெடுப்பவனைக்காண மேலானவனாக இருந்தால் தெருவுக்காரர்கள் தெரிந்தெடுப்பது (அவுலா) எத்தமாயிருக்கும். ஏனென்றால் இமாமத்துடைய நன்மையும், கெடுதியும தெருவுக்காரர்களைச் சேர்ந்ததாக இருக்கிறது. இனி கட்டினவனும் தெருவுக்காரனும் தெரிந்தெடுக்கப்பட்ட இரண்டு மனிதரும் சரி சரியாக இருந்தால் பள்ளியைக்கட்டினவன் தெரிந்தெடுக்கப்பட்ட மனிதன் எத்தம் இதேவிதமாக புஸ்ஸாசிய்யா என்கிற கிதாபிலும் ஃகுலாஸா என்கிற கிதாபிலும் வருகிறது.

2. ரத்துல் ஃமுக்தார் 3-வது ஃவாலியம் 452-வது பக்கம் 1-வது வரி வக்புடைய பாடம்

மஸ்ஜிதைக் கட்டினவன் இமாமையும் மோதினையும் நே-
மிக்கிற விஷயத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட (முக்தாரான ெ

யும். மத்துவர்களைக்காட்டிலும் சுத்தமானவன் ஆனால் வமைத்த ஜ
னங்களால் நேமிக்கப்பட்டவன் கட்டினவனால் குறிக்கப்பட்டவ
னைக்காட்டிலும் சுத்தமானவனாக இருந்தால் ஜனங்களால் குறி
க்கப்பட்டவன் உத்தமானவன்.

17648

3 அல்லாவின் திருநாமத்தைகொண்டு துவக்கம் செய்கிறேன். துர்றுல்முக்தார் மத்பஹா முஜ்தபாயி, டில்லி, 1-வது வாலியம் இமாமத்துடைய பாடம் 62-வது சயிட்டு 19-வது வரி.

தொழுகைக்கு முற்படுத்துகிற விஷயத்திலும், மஜ்மஉல்
அன்ஹுர் என்கிற கிதாபில் வருகிறதின்படி நேமிக்கிற விஷயத்
திலும், இமாமத்துக்கு ரொம்ப பாத்தியமானவன் வெளிரங்க
மான கெடுதல்களை தவிழ்ந்திருக்கிற ஷருத்துடன். பருலான கி
ரு அத்து ஒரு சொல்படி வாஜிபான கிரு அத்து இன்னொரு சொ
ல்லின்படி சுன்னத்தான, கிரு அத்து மட்டில் பாருமல்பாடமிட்
டு தொழுகைக்கு கூடுமான ஹுக்குமுகளையும், தொழுகையை
முறிக்கும்படியான ஹுக்குமுகளைமட்டும். ரொம்ப அறிந்தவனா
க இருக்கிறது இதில் எல்லவரும் சரி.சரியாக இருந்தால் இமா
மத்துக்கு பாத்தியமானவன் நன்றாய்ஓதத்தெரிந்தவன் பின்பு ஹ
ராமானதையும் அதில் சந்தேக மானதையும் மிகுதமாக தவிழ்
கிறவன் பின்பு வயசில் முந்தியவன் அதாவது இஸ்லாமில் முந்
தியவன்; அனபோதே புது இஸ்லாமான கிழவனிலும் இஸ்லா
த்திலுள்ள வாலிபனை முற்படுத்தப்படும் பேணுதலில் முந்தின
வன் என்றும், சொல்லி இருக்கிறார்கள், இன்னும் சகலவிதகற்
குணத்தையும் இதின்படிக்கே கவனித்து கொள்ளப்படும் என்
று சாது என்கிற கிதாபில் சொல்கிறதாக நஹர் என்கிற கிதா
பில் வருகிறது. ஆனையால் படிப்பிலேயும் அதைபோலொத்தகி
லும் முந்தினவனை முற்படுத்தப்படும் இப்படி ஒவ்வொன்றையு
ம் கவனிக்கும்பொழுது சீட்டு போடவேண்டிய தேள்வை கு
றைந்துவிடும் பின்பு ஜனங்களிடத்தில் உறவாடுகிறவன் பின்பு மு
கத்தால் அழகானவன் அதிகமாக தஹஜ்ஜத்து தொழுகை தொ
ழுகிறவன் பின்பு சாது என்கிற கிதாபில், சந்தோஷமுகமுள்ள
ன் சங்கையால் மிகைத்தவன் என்பதை; அதிகமாக்கினார்கள்

பின்பு வம்மூஷத்தால் சிறப்பானவன் பின்பு இதானியால் அ காஷவன் என்பதை புருஹான் என்கிறகிதாபில் அதிகமாக்கிறா ர்கள் பின்பு அழகான பென்சாதிபுடயவன் மிகுதலும் அட வன் தலமைத்தனம் அதிகமானவன். என்று அஷ்பாக என் கிறகிதாபில் தமனுல்மிதுல் என்கிறபாடத்து கொஞ்சமுக் வருகிறது பின்பு புடவை ரொம்ப சுத்தமானவன் பின்பு பெருத்து மைத்த உருப்புகள் சிறுத்து இருப்பவன் பின்பு சாபிரைக்காண முகீமா இருப்பவன் பின்பு இடைகாலத்திலான குலமகனிலும் அசல்குலமகன் பின்பு பெருந்துடக்குக்கு தயமம் செய்தவனைகாண சிறும் துடக்குக்குதயமம் செய்தவனே முற்ப டுத்தப்படும்.

4 துற்றுல்முக்த்தார் 1-வது வாலியம் 83-வது பக்க ம் 3-வது வரி முஜ்தபாயி அச்சுக்கூடம் டில்லி. இமாமத்துடய பாடம்.

அவர்கள் எல்லாம் சரிசரியாக இருந்தால் சரியாக இரு ப்பவர்களுக்கிடயில் சீட்டுபோடப்படும், அல்லது ஜமா அத்து களுடைய இஸ்டப்படி ஜமா அத்துகள் விதற்ப மாவார்களானு ல் அவர்களில் மிகுதம்பேர்கள் அபிப்பிராயப்படி நியமிக்கவே ண்டியது. அவர்கள் லாயக்கில்லாதவனே நேமித்தால் குற்றமில் லாத கெடுதி செய்திட்டார்கள் வீட்டுக்காரனும் அவனைப் போ லயே வளமையான மஸ்ஜிதுடய இமாமும் மைத்த ஜனங்களை க்காட்டிலும் பொதுவாக இமாமத்துக்குயேற்றம் ஆனல் அவ னுடன் சுல்தான் அல்லது காலிஇருந்தால் அவர்களின் அதிகா ரம் அடையவனிக்கிருப்பதினல் அவனிலும் முற்படுத்தப்படுமெ ஹத்தாரி என்கிரவர்கள் பகிரங்கமாகவளமையான இமாமின் பேரில் காரியதருசியை முற்படுத்திவைக்கவேணுமென்றார், ஏற வனுக்கு குடியிருக்கிற வீட்டுக்காரனும், வாடகைக்கு இருக்கிர வனும் வீட்டுக்காரனைவிட பாத்தியமுள்ளவர்களாக இருக்கும் ஒ ருவன் இமாமத்து செய்வதை அவனிலுண்டான கெடுதிக்காவ து அல்லது ஜனங்கள் இமாமத்து செய்வதற்கு அவனைவிட ரொ ம்ப பாத்தியமுள்ளவர்களென்பதற்காவது அவர்களுடைய சம் பதமில்லாதிருக்க இமாமத்து செய்வதை அவனுக்கு மக்ரூஹ் தகுரீமாக்கப்படும்.

ஏனெனில்

அபீதாவூத் அவர்களால் சொல்லப்பட்ட முகம்மது நபி (ஸல்) அவர்கள் சொல் ஜனங்கள் சம்மதமன்றி ஒருவன் இமாமாக முந்தினல் அவனுடைய தொ ழுகையை அல்லா சுபுகான ஹூத்தஆலா ஒப்புக்கொள்ளமாட்டான்.

5. ரத்துல் முக்தார் 3-வது வாலியம் 306 வது பக்கம் ஜிசியா உடைய பாடம் கடைசி 25, 26-வது வரி,

பாத்தியக்காரனுக்கு அதை கொடுப்பதும், பாத்தியமில் லாதவனுடைய சுதந்தரத்தை விட்டு அதை நீக்குவதும் கா்ரிய தருசியின்பேரில் கடமையாக இருப்பது. பாத்தியமான ஒருவ ன் இறந்துபோனல் அதை அவன் மகனுக்கு கொடுக்கப்படும். அவன் தகப்பனுடைய நடத்தையில் இல்லையானுல் அவனை அ தைவிட்டும் நீக்கி லாயக்கான மனிதனுக்கு கொடுக்கப்படும் ஏ னென்றால், வக்பு வைத்தவனுடைய கருத்தாகிறது. வக்பு விட் டதை க்ஷேமமாக்கி வைக்கவேணுமென்பதில் சந்தேகமில்லை. ஆ னதால், அதை பழுதாக்கிற நடங்களும் ஷறஹுக்கும் வக்பு செய்தவனுடைய கருத்துக்கும் விரோதமாக இருக்கும். இது வாகிறது அதைவிட்டும்திரும்ப இடமில்லாத நிச்சயமான பேச்சு.

6. அல்லாவின் திருநாமத்தைக்கொண்டு துவக்கம் செய்கிறேன். ஷறஹுல்கபீரி. 1-வது வாலியம் 585 வது பக்கம் 19 வது வரி ஜனுசா உடயபாடம்.

அதிகாரி அல்லது அவருடைய கலீபாவும் காலியும் ப ட்டாளத்துக்கு தலைமை உத்தியோகஸ்தரும தெருவு இமாமும் சொந்த வலிக்காரர்களும் ஜனுசா தொழுகைக்கு வந்திருந்தால் இவர்களில் ஒருவரையும் முந்தவிடாமல் சொந்தக்காரர்கள் தா ங்கள் முந்த நாடுவார்களானல் அதற்கும் தாங்கள் நாடினவர்க ளை முற்படுத்திவைப்பதற்கும் அதிகாரமுண்டு. அவர்களுடைய உ த்திரவில்லாமல் ஒருவனும் முந்தக்கூடாது மேலேசொன்ன ஹு க்குமாகிறது இமாம் அபூஹனீபா, இமாம் அபூயூசுபு, இமாம் சுபர், இமாமுல்ஹசன், இவர்களுடைய சொல்லில நின்றும் எடுக்கப்ப ட்டதாக இருக்கும்

7, ரத்துல் முக்தார் 1-வது வாலியம் 649 வது பக்கம் 1, 2, வரி.

ஷறஹூல்முன்யா என்கிற கிதாபிலே சொல்கிறார், ஜனசா தொழுகையின் அதிகாரம் வலிக்காரனுக்காக இருக்குமென்பது அசல் மூலாதாரம்.. இதற்காகவேண்டியே இமாம் அபூயூசுபு இமாம் ஷாபிஹி றகுமதுல்லாஹி அலைஹிமா இவர்களுடைய சொல்லிலும் இமாம் அபூஅனிபா றஹ்மதுல்லாஹி அலைகி அவர்களை தொட்டு ரிவாயத்திலும், எல்லவரையும் காண வலிக்காரனை, ஜனசாதொழுகைக்கி முற்படுத்திவைக்கப்படும். ஏனென்றால், நிச்சயமாக இந்தஹூக்குமாகுறது நிக்காஹ் முடித்துவைப்பதைப்போல் சொந்தக்காரன் அதிகாரத்தைக்கொண்டு கொழுகியதாக இருக்கிறது.

8, ஆலங்கீரி 1-வது வாலியம் 164 பக்கம் 1.வது வரி, ஜனசா தொழுகைப்பாடம்.

மையத்து தொழுகை வலிகாறன் தொழுதிட்டானேயானால் அதற்குப் பின் யாரும் தொழுவது ஜாயிசு இல்லை.

9. ஆலங்கீரி 1-வது வாலியம் 164 பக்கம் 3-வது வரி

வலி அல்லது சுல்த்தான் அல்லாதவன் தொழுதானானால் வலி நாடினால் தொழுகையை திரும்பவும் தொழுவான். இந்தப்படிக்கு ஹிதாயாவிலும் வருகிறது.

கடவுளின் திருநாமத்தை கொண்டு துவக்கம் செய்கிறேன்,

10, மிஷ்காதுல் மசாபீஹ் குரு ஆனுடையவருசையைப் பேசுகிற பாடம் 192-வது பக்கம் வரி.

முஹம்மது நபி (ஸல்) சொல்.

குரு ஆனை ஓதி அதற்கு பிரதிப்பிரயோஜனம் மனிதர்களிடத்தில் வாங்கித்தின்பதை தேடுவார்களானால் அவர்கள் கியா

மத்து உடயநாளில் முகத்தில் இரக்ஷிபில்லாமல் எலும்புமுகமா ய் வருவார்கள்.

11 முஹம்மது நபி (ஸல்) சொல்,
குருஆனை ஓதுங்கோ அதைக்கொண்டு தின்னுதீர்கள்.

12 ரத்துல்முக்தார் 5-வது வாலியம் 36-வது பக்கம் கூலியுடைய பாடம் 5,-6 வரி.

குரு ஆனை ஓதி அதற்கு பிரயோஜனம் வாங்கி தின்னுதீர்க ளென்கிற முஹமமது நபி(ஸல்) யுடைய சொல்லுக்காக வேண்டி ஹனபி மதுஹபில் இஸ்லாமானவர்களுக்குச் சொந்தமான வணக்கங்களுக்காக கூலிவாங்குவது கூடாதென்பதுதான் மூலாதாரம்

13. மஜ்முஹத்துல்பதாவா 2-வது வாலியம் 363-வது பக்கம் 7-வது வரி 239-வது கேழ்வி ஆகும் ஆகாதென்பதை பேசுகிற பாடம்.

குரு ஆனை கூலிக்கி ஓதுவதையே தங்களுக்கு ஜீவனமாக எற்படுத்திக்கொண்டவர்களாயும் மவுலான ரூஹி என்று மடயர்களிடத்தில் அழைக்கப்படுகிறவர்களாயும் இருக்கக்கூடிய ஜனங்களைக்கொண்டு இறந்தவர்களுக்காக குருஆனை ஓதச்சொல்வது ஆகுமா? ஆகாதா?

மறுமொழி,

கூலிக்கு குரு ஆனை ஓதுவது ஹறும் என்று தன்கிஹூல் பத்தாவல் ஹாமிதிய்யா என்ற கிதாபில் வந்திருப்பதால் அவர்களைக்கொண்டு குரு ஆனை ஓதச்சொல்வது கூடாது. இப்டிக்கு, அபுல் அசனுத்முகம்மது அப்துல் ஹை லக்னௌ.

14. ரத்துல் முக்தார் 1-வது வாலியம் இமாமத்துடை பாடம் 415-வது பக்கம் 10-வது வரி.

பாங்கு சொல்வது, இமாமத்து செய்வது, குருஆனை கற்றுக் கொடுப்பது இவைகள் மார்க்கத்தில் அத்தியாவசியமான

காரியங்களாக இருப்பதால் இவைகளுக்கு கூலி வாங்கலாமென்
று பிற்காலத்தில் வந்த மார்க்க நிபுணர்களுடைய தீர்மானமே
ஒழிய படித்துக்கொடுப்பதைவிட்டும் தனித்த ஓதுதலுக்காகவும்
மார்க்கத்தில் லஙர் அல்லாதமற்ற எல்லா வணக்கங்களுக்காகவு
ம், கூலி வாங்குவது நிச்சயமாக எவ்வளவும் கூடாதென்று இனி
எழுதப்போகிற கூலிப்பாடத்தில் ஸ்திரப்படுத்துவோம். விளங்கி
அறிந்துகொள்.

15. ரத்துல் முக்தார் 5-வது வாலியம் 36-வதுபக்கம் 30-வது வரி கூலியுடைய பாடம்

ஜவ்ஹரு என்கிற கிதாபில் ஆகுமென்று சொன்ன விஷ
யத்தை சாஹிபுல் பஹர் பார்த்து மெறண்டு கிதாபுல் வக்பு எ
ன்ற பாடத்தில் எல்லா வணக்கத்துக்காகவும் கூலி வாங்குவது
ஆகுமென்றும், அதில் நின்றும் உள்ளதுதான் தனித்த ஓதுத
லையும என்று இவ்விதமெல்லாம் மெறண்டுசொன்ன பஹருற்று
யிக்குகாறரையே துயர்ந்து றத்துல் முக்தார் காறரும் கிதாபு
ல் வஸாயா என்கிற பாடத்திலும் சொல்லியிருப்பதாய் தெரிய
வருகிறது. பஹருற் றுயிக்குடைய ஹாஷியாவில் ஷெய்குகைறு
த்தின்றமலி வக்புடைய பாடத்தில் இதை றத்து செய்து சொ
ல்லியிருப்பதாவது கூலி வாங்குவது இனும் என்று எண்ணிக்
கொண்டு வாங்குவதும் கொடுப்பதும ஆகுமென்று பத்வா செ
ய்யப்பட்ட பேச்சு. குரு ஆனபடித்துக் கொடுப்பதற்கே யல்
லாது இந்த விஷயம் தனித்த ஓதுதலுக் கல்லவென்றுசொல்
லி றத்து செய்துவிட்டார்.

16. ரத்துல்முக்தார், 5-வது வாலியம், கூலியுடைய பாடம் 37-வது பக்கம் 6 முதல் 23 வரி வரை.

அல்ஹல்லாமத்துல் கல்வதீ ஹாஷியத்துல் முன்தகல்
ஹம்பலி என்கிறகிதாபில் ஷைகுல் இஸ்லாம் தஹிய்யுத்தின்
என்கிறவர்களைத்தொட்டும் நகல் செய்கிறதாவது.

குரு ஆனை ஓதி அதை இறந்தமனிதனுக்கு நன்கொடை செய்வதற்காக கூலி தேடுகிறது ஆகுமென்று ஒரு இமாமைக்கொண்டும் நகல் செய்யப்படாததினால் கூலி வாங்குவது கூடாது.

உலமாக்கள் சொல்கிறதாவது.

பணம் காசுக்காக குருஆன் படிக்கிறதினால் படித்தவனுக்கேயாதொரு பிரயோஜனமில்லாதிருக்க அவன் இறந்துபோனவர்களுக்கு என்ன பிரயோஜனத்தை எத்திவைப்பான் இறந்தவர்களுக்குசேருவதெல்லாம் நல்ல வணக்கமே குரு ஆனைகற்றுக்கொடுக்ககூலிவாங்குகிற விஷயத்தில் இமாம்கள்தற்கித்தார்களேயொழிய குரு ஆனை படிப்பதற்கு கூலிவாங்கலாம் என்று ஒருவரும் சொல்லவில்லை. பர்கவீ இமாம் தரீகததுல்முஹம்மதியா என்கிற கிதாபின் கடசியில் சொல்கிறார் 3 வது பிரிவாகுறது மனிதர்கள் நல்லவணக்கம் என்கிற எண்ணத்தின்பேரில் மார்க்கத்திலில்லாத கெட்டகாரியத்தில் முகம் குப்புர அடித்து விழுந்துகிடக்கிறதைச் சொல்வதா யிருக்கும், ஒருமனிதன் தான் இறந்துபோவதற்கு முன்னால் இறந்த நாளில் அல்லது பின் விருந்து செய்யும்படியாக வஸிய்யத்து செய்வதும் அவனுடைய உயிருக்கு குருஆன், தஸ்பீஹு, கலிமா, ஓதுகிறவர்களுக்கு பணம் காசுகள் கொடுக்கும்படி வஸிய்யத்து செய்வதும்,இதுவெல்லாம் வீண்யென்று விலக்கப்பட்ட பிதுஅத்தாயிருக்கும்.

உலகபிரயோஜனக்காக குரு ஆன் ஓதி திக்கிர் செய்தவன் பாவி. அதற்காக பணம்காசுகள் வாங்குவது ஹறாம். இதுவிஷயத்தில் 4 றிசாலாக்கள் கோர்வை செய்திருக்கிறேன் என்பதாக எழுதி இருக்கிறார். இது முதலிய சங்கதிகளை நீ அரிந்துகொண்டபோது நாம்சொன்னது உண்மை என்பதும் இதற்கு மாத்திரம் சொல்வது மதுஹபைவிட்டும் பல்கு தேசத்து உலமாக்கள் செய்த தீர்ப்பைவிட்டும் மதினுகளிலும் ஷறஹுகளிலும் பத்வாக்களிலும் நம்முடையஇமாம்கள் ஒருமித்துச் சொன்ன சொல்லை விட்டும் பிரதிப்பட்டதாயிருக்கும் மென்பது உனக்கு வெளியாகும்.

மேற்சொன்ன சங்கதிகளை பெரியோர்களின் சொற்களை விளங்காத ஜாஹிலாகிய வீண் தர்க்கம் செய்கிற படயனேயொழிய மற்ற யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள்- சில ஹாஷியாக்காறர்கள் விஷ ஜந்துக்களால் கடிபட்டவனுடைய விஷயத்தில் வந்த புகாரியுடைய ஹதீசைகொண்டு குரு ஆனை ஓதி கூலி வாங்குவது ஆகுமென்கிறதின்பேரில் ஆதாரவு பிடித்தது தப்பு.ஏனென்றால், கூலி வாங்குவதை விலக்கின முன்னோர்களாகிய இமாம்களும், கூலிக்காக மந்திரம் செய்வது குரு ஆனைக்கொண்டிருந்தாலும் சரி ஆகும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப்போல், தஹ்தாவி என்கிற இமாமும்சொல்லுகிறார் ஏனென்றால், இது கலப்பருதலான இபாதத்தல்ல, வைத்திய தொழிலில் நின்றுமுள்ளது. 45 திருஹத்துக்கு குறைவாக குரு ஆனை கத்தம் செய்வதற்கு கூலி வாங்குவது ஆகாதென்று ஹாவிஸ்ஸாஹிதி என்பவர்கள் சிலஹாஷீஷ்காறர்களைத் தொட்டும் நகல் செய்யப்பட்ட பேச்சு மதஹபுடையவர்கள் அடங்கலும் ஒத்து ஓர்மித்து சொன்ன பேச்சைவிட்டும் புரம்பானதாக இருக்கும் இப்படி இருக்கும் போது இக்காலத்தார் குரு ஆனை கத்தம் செய்வது கலிமா ஓதுவது கொண்டு வஸியத்து செய்வது கெட்டது என்பதை அகப்பார்வை இழந்தவனைத்தவிர ஆட்சேபிக்கமாட்டான். அவ்விதமான கெடுதிகள் அதில் உண்டாவதை கவனிக்காமல்அதின்பேரில் முகம் குப்புற அடித்து விழுந்து கிடப்பது தப்பிதம் என்பது இப்பொழுது உனக்கு தெரிந்த விஷயம்.

இதுவிஷயத்தில் ஷிபாவுல் அலீல் வபல்லுல் கலீல் பிஹுகுமுல்வஸிய்யதி பல்கத்துமாத்தி வத்தகாலீல் என்றுநாமதேயம் ஏற்படுத்தி ஒரு ரிசாலாவைக்கோர்வை செய்து அதில் புத்திவான்களுக்கு தெரியும்படியாய் ஆச்சரியத்திலெல்லாம்ஆச்சரியமாகிய சங்கதிகளைவிபரித்திருக்கிறேன். அதில் இதுவிஷயத்தைப்பற்றி நான் சொல்லிவந்த ஞாயங்களைச் சேர்த்திப்பார்த்தால் கடலில் நின்றும் ஓர் துளியைப்போலும் மலையில் நின்றும் ஓர் மணியைப்போலுமாயிருக்கும் இந்ததுற்றுல் முக்தார் கிதாபுக்கு விரித்துரை சொல்லக்கூடிய தங்கள் காலத்தில் நிகரற்ற மார்க்க நிபுணராகவும் மிஷர் தேசத்துக்கு ஆரம்ப முப்தியாக

மிருந்த சையது அஹமது தஹ்லான் என்ற நாயகத்திடத்தில் ஷெ ரிசாலாவைக்காண்பித்ததில் ரொம்ப அழகான புகழாகப்புகழ்ந்து இது சரியென்று தங்கள் கையெழுத்து செய்தார்கள் ஆண்டவன் அவர்களுக்கு புண்ணியம் கொடுப்பானாகவும் இதன்னியில் அக்காலத்தில் அவர்களைத் தவிர உள்ள மார்க்க நிபுணர்களும் சரி என்று கையெடுத்துச் செய்திருக்கிறார்கள்.

17. மஜ்மூஅத்துல் பதாவா 2-வது வாலியம் 54 வது பக்கம் 9-வது வரி 28-வது கேள்வி.

கத்தமல் அன்பியா, கத்தமல்யூனூசுகத்தமல்குரு ஆன் வகையறுக்களை சில ஜனங்கள் கூடி ஓதி கூலிவாங்குகிறார்கள் இந்த விதமாக ஓதுவதும் கூலி வாங்குவதும் மார்க்கத்தில் ஆகுமா! ஆகாதா!

மருமொழி.

குரு ஆனைக் கற்றுக் கொடுப்பதற்காக கூலி வாங்குவது முத்தகத்திமீன்களிடத்தில் ஆகாது. முத் அக்கிரீன்களிடத்தில் ஆகும். தவிர கற்றுக் கொடுப்பதில்லாமல் குரு ஆனை தவாபையே நாடப்படுமே. அப்பேர்ப்பட்ட தனித்த ஓதுதலைக்கு கூலி வாங்குகிறதும் அதைக்கொடுப்பதும் முததகத்திமீன்களிடத்திலும் முத்த அக்கிரீன் களிடத்திலும் ஆட்சேபணையில்லாமலெல்லாருடைய ஒத்துமைப்படிக்கும் ஆகாது

ஏனென்றால்.

தாத்தாருகானிபாவில் வருகிறதாக கைரிய்யா என்கிற கிதாபில் எழுதியிருப்பதை தன் கிஹால் பதாவல் ஹாமிதிய்யா என்கிறகிதாபில் சொல்கிறார் தன்னுடையகபுரின்பேரில் குருஆனை ஓதுவதற்கு தன்சொத்தில் நின்றும் இன்னதை ஒரு மனிதனுக்குக் கொடுக்கும்படியாய் தன்னுடைய அந்தியகாலத்தில் வஸியத்து செய்வது கூடாது. அப்படி ஓதுகிறவனை இன்னானென்று குறிப்பிட்டிருந்தாலும் சரி அல்லது பொதுவாக இருந்தாலும் சரி. எவ்விதத்திலும் கூடாது. ஏனென்றால் இந்த வஸிய்யத்து கூலியினு

டையதானத்திலிருப்பது. மார்க்கத்தில் அத்தியாவசியமான காரியம் கெட்டுப்போகும் என்கிற கஷ்டத்திற்காக குரு ஆனைக்கற்றுக் கொடுப்பதற்கு கூலி வாங்குவது ஆகுமென்பதை மார்க்க நிபுணர்கள் இஸ்திஹ்ஸான் உடை பாதையின்படிக்கு ஆகுமென்று ஏற்படுத்தி இருந்தாலும். மார்க்கத்தில் இறந்து போனவர்களுடைய கபுரடியில் இருந்து ஓதுவது அத்தியாவசியமானதல்லாததினால் அதற்கு கூலி வாங்குவது ஆகுமென்று சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

ஷெ தன்கீஹுல்பதாவல் ஹாமிதிய்யா பஹ்ருர் ருயிகு உடைய ஹாஷியாவில் வருகிறதாக எழுதுகிறார் குருஆனைக்கற்றுக்கொடுப்பதற்கு கூலிவாங்குவது இஸ்திஹ்ஸானுடையபாதையின்படிக்கி ஆகுமென்பதே தவிர கற்றுக்கொடுப்பதை விட்டும் தனித்த ஓதுதலுக்கு கூலிவாங்குவது கூடாதென்பதே இதுவிஷயத்தில் முடிவான தீர்மானம் ஹிதாயாவுடைய ஷறகில் அய்னி என்கிற இமாம் எழுதுகிறார். உலக ஆசைக்காக குரு ஆன் ஓதுகிறவனைத் தடுக்கப்படும். அதற்கு கூலி கொடுக்கிறவனும் வாங்குகிறவனும் இரண்டு பாவிகளாகயிருக்கும்.

இந்தப்படிக்கு,

அபுல்ஹசனுத்முகம்மது அப்துல்ஹை லக்னோ.

18 மஜ்மூஅத்துல்பதாவா 2-வது வாலியம் 241-242 வது பக்கம் 43-வது கேள்வி.

நபி(ஸல்)அவர்களின் மார்க்க கேள்விகளுக்கு தீர்ப்பு எழுதும்படியான நிபுணர்களே மியாஞ்சி மொல்லாக்களை விருந்துக்காக சேகரம் செய்து அவர்களுக்கு சாப்பாடு கொடுத்தபின்னுவது அல்லது முன்னுவது கூலிக்காக கபுருகளுடைய ஜியாறத்தை செய்கிறார்கள். அதாவது காசுபணம் வகையறாக்கள் குறிப்பிடாவிட்டாலும் வழமையாய் கூலி கொடுப்பதை கடமை என்று எண்ணுகிறார்கள். ஷெ மியாஞ்சிகளும மொல்லாக்களும் பணம் காசுகளுடைய ஆசை வைத்துக்கொண்டு ஷெ ஜியாறத்துக்குப் போகிறார்கள். பணம் காசுகள் கொடுக்கவில்லையானால்போகமாட்டார்கள். இந்தவிதமான விருந்து கொடுக்கிற விஷயத்திலும் கட

ருகளை ஜியாறத்து செய்கிற விஷயத்திலும் சிறப்பாகிய மார்க்க த்தில் என்ன சட்டம் ஏற்பட்டிருக்கிறது இறந்தவர்களுக்கு ஓதக் கூடிய புண்ணியத்தை சேர்த்து வைப்பது ஷெ இறந்தவர்களு க்கு சேரட்டும் அல்லது சேராமல் இருக்கட்டும், அப்படி சே ருகிறதென்று வைத்துக்கொண்டால் அதற்கு கூலியை வாங்கு வது ஆகுமா? ஆகாதா?

முஹம்மது நபி (ஸல்) யுடைய திருவனத்தில் கபருகளை ஜியாறத்துச் செய்யுங்கோ என்று கண்டிப்பானஉத்திரவு செய்ய ப்பட்டிருக்கிறதேயல்லாமல் கபருகளுக்கு ஜியாறத்துச்செய்தவை ப்பதைப்பற்றி ஒரு இடத்திலும் வந்திருப்பதாக தெரியவில்லை அப்படி ஜியாறத்து செய்து வைப்பதும் இன்னமும் கத்தம் தஸ்பீஹு தஹ்லீலு ஒதுகிற விஷயத்தில் கூலியை இன்னதெ ன்று குறிப்பிடுவதும் ஆகுமா? ஆகாதா? மேல்சொன்ன கேள்வி களுக்குச் சரியான ஆதாரவைக்கொண்டு விபரம் சொல்லுங்கள் நீங்கள் ஆண்டவனிடத்தில் மிகுதமானநற்கூலியை பெற்றுக்கொ வீர்கள்.

மறுமொழி.

தஸ்பீஹு தஹ்லீலு குரு ஆன் ஓதவும் ஜியாரத்து வகையறுக்களைச் செய்ய கூலி கொடுப்பதும் அதை வாங்குவது கூடாது என்றல்.

பதாவல் ஹாமிதிய்யா என்கிற கிதாபில் வருகிறது மத ங்கள் ஷரஹுகள் பத்துவாக்களில் றெம்பவும் கியாதியை அடை ந்த எல்லா கிதாபுகளுடைய சட்டங்களிலும் வணக்கத்துக்காக கூலி வாங்குவது நம்மள் மதுஹபில் கூடாதென்றுஒத்துமையாக வந்திருக்கிறது ஆனால் வணக்கத்துக்காக கூலிவாங்குவது ஆகா தென்ற மொத்தமான சட்டத்தில் நின்றும் குரு ஆன் படித்து க்கொடுப்பதை நீக்கி பல்கு தேசத்தில், பிற்காலத்தில் வந்த பெ ரிய மஹான்கள் கற்றுக்கொடுப்பதை விட்டும். தனித்த ஓதுத லே புண்ணியம் தேடும்படியான பெரிய வணக்கமாகயிருப்பதா ல் அதற்காக கூலி வாங்குவது கூடாது வணக்கத்தில் புண்ணி யம் கிடைப்பதற்கு அந்தவணக்கம் கடவுளுக்காகவே கலப்பற்ற தாக இருக்கிறது அவசியம். கூலிக்காக ஓதுகிறவன் இவ்வுலக

ஆசைக்காக வேண்டி ஓதுகிறவனை தவிர கடவுளுக்காக ஓதுகி
றவனல்ல என்று ஏற்படுத்தினார்கள் கூலிக்கு ஓதச்சொன்னவ
ன் ஒன்றும் கொடுக்கமாட்டான் என்று ஓதக்கூடியவனுக்கு தெ
ரிந்தால் ஒரு எழுத்தைக்கூட ஓதமாட்டான். அதிலும் இதே தொ
ழிலாக ஏற்படுத்திக்கொண்டவன் நிச்சயமாக ஒரு எழுத்தைக்
கூட ஓதமாட்டான். இதற்காகவே ஹிதாயாவுடைய ஷரஹில்
கூலிக்கு குரு ஆனை ஓதுகிறவன் நன்மையைப் பெற்றுக்கொள்
ளுவதற்கு லாயக்கானவனல்ல' இறந்தவனுக்கும் ஓதினவனுக்கு
ம் யாதொரு நன்மையும் கிடைக்க மாட்டாதென்று தாஜுஷ்
ஷரீஆ என்கிற இமாம் சொல்லி இருக்கிறார்கள்.

ஒரு மனிதன் தன் இஷ்டனுடைய கபுறடியிலாவது குரு
ஆனில் நின்றும் கொஞ்சத்தை ஓதி ஜியாரத்துச் செய்தால் அது
நல்ல அழகான செயல்தான் அப்படி ஓதவேணுமென்கிறதைக்
கொண்டு தன் மரணகாலத்தில் வஸிய்யத்து சொல்லி வைப்பதற்
கு அர்த்தமில்லை ஓதினவனுக்கு இனாம் கொடுப்பதற்கும் யாதொ
ரு அர்த்தமும் இல்லை. எனனால் இந்த இனாமாகுறது குரு ஆனை
ஓதுகிறதற்கு கூலி கொடுப்பதைப்போலவே ஏற்படுகிறது' அப்
படி கூலி கொடுப்பது மார்க்கத்தில் ஆகாத காரியமாயிருப்பதெ
ன்று பத்தாவா வல்வாலிஜிய்யா என்கிற கிதாபில் எழுதப்பட்
டிருக்கிறது.

இன்னும் ஒருமனிதன் தன்னுடைய கபுறடியில் குர்ஆனை
ஓதவேணுமென்று தன் மரணகாலத்தில் வஸிய்யத்து செய்தா
ல் அந்தவஸிய்யத்து செல்லாதென்று பதாவா வஸ்ஸானிய்யா எ
ன்கிற கிதாபில் எழுதி இருப்பது.

இன்னும் கடவுளின் வணக்கத்துக்காக கூலி வாங்குவது
கூடாதென்று தாத்தாருகானியா என்கிற கிதாபிலும் வந்திருக்
கிறது.

இதனால் துன்யாவை சம்பாதிக்கிற நாட்டத்துடன் தஸ
பீஹு தஹ்லீல் துஆக்களை ஓதி ஜியாறத்து செய்வது வகை
யறா போலொத்ததில் மையத்துக்கும் அதைச்செய்தவனுக்கும்
யாதொரு தவாபுமில்லை. வணக்கம்போலொத்ததுக்கு கூலி கொடு

ப்பதும் வாங்குவதும் விலக்கப்பட்டதாக இருக்கும் என்று நன்று ய் தெரிகிறது ஆண்டவன் மிக அறிந்தவன். இப்படிக்கி அபுல் அசனுத்பூறம்மது அப்துல்ஹைற என்று,

19 அல்லாவுடைய திருநாமத்தைக்கொண்டு துவக்கம் செய்கிறேன் மஜ்மூஅத்துல் பதாவா 2-வது வாலியம் 307-வது பக்கம் 10-வது வரி 195 வது கேள்வி.

நாயகத்தனமான உலமாக்களே நம்மள் தேசத்தின் வழமையில் ஒவ்வொரு பட்டணத்திலும் பட்டிக்காட்டிலும் பட்டணத்தின் மஹல்லாக்களிலும் இமாமத் துச்செய்வதற்காக நிக்காஹுடைய மஜ்லீஸில் ஈஜாபு கபூல்சொல்லி கொடுப்பதற்காக நிகாஹு புஸ்தகத்தில் எழுதுவதற்காக ஜனாஸாவுக்கு பின்னால் போவதற்காக ஜனாஸா தொழுகைவைப்பதற்காக இன்னும் இதல்லாத காரியங்களுக்காக தங்கள் தகப்பன்மார்களின் கேமகட்டளையின்பேரில் ஏற்படுத்தப்பட்ட மனிதர்கள் சிலரைத்தவிர மற்றவர்களுக்கு படிப்பில்லை அவர்கள் விஷயத்தில் என்ன தீர்மானம் சொல்லுகிறீர்கள் இவ்விதம் வழமையான ஏர்ப்பாட்டைக்கொண்டு காஜிகளாயிடுவார்களா, அவர்கள் எத்தீமான சிறுபிள்ளைகளை நிக்காஹு முடித்துவைப்பதும் ஜும்ஆ பெருநாள் தொழுகைகளை நடத்திவைப்பது ஆகுமா இதற்கு பதில் விபரமாய்சொல்லுங்கோ நீங்கள் நற்கூலியை கொடுக்கப்படுவீர்கள்.

மறுமொழி.

மேல்சொல்லப்பட்டவர்கள் காஜிகளாக மாட்டார்கள் ஏனென்றால் சுல்தானுடைய அதிகாரத்துக்குள் இருக்கும்படியான ஊர்களில் சுல்தானின் நின்றும் நேமிக்கிறது கொண்டுதான் காஜியாக ஆவார் இவ்விதமாக துற்று என்கிற கிதாபிலும் மற்றும் கிதாபிலும் இருக்கிறது ஆனால் இஸ்லாமல்லாதவர் அதிகாரத்துக்குள் இருக்கும்படியான ஊர்களில் இஸ்லாமானவர்கள் அடங்கலும் ஒத்துமையாக அவர்களில் ஒருவரை காஜியாகநேமித்து பொருந்தி இருப்பதைக்கொண்டுதான் காஜியாவார்.

7A
8-4

றத்துல் முக்தார் என்கிற கிதாபில் சொல்கிறார் இஸ்லா

லாமானவர்கள் பொருந்துகிறது கொண்டு காஜி காஜியாக ஆகிவிடுவார் ஆனதினால் அவரை இஸ்லாமான அதிகாரியாக ஆக்கிக்கொள்வது. அவர்களின்பேரில் வாஜிபு. ஆனபோதே இஸ்லாமானவர்கள் அவர்களில் ஒருத்தனை காரியஸ்தனாக்கி அவர்களுக்கிடையில் தீர்ப்புச்செய்யும்படியான காஜியாக நேமித்து ஒத்துமையாக இருப்பது வாஜிபு, இதுவும் ஷடி கிதாபிலேயே இருக்கிறது.

ஆகையால நாம் மேலேசொல்லி வந்ததை அறிவாயானால் கேள்வியில் சொல்லப்பட்டவர்களிலே அந்தக் காரியங்களைக் காணப்படவில்லை இன்னும் இவர்கள் அவர்கள் தகப்பன்மார்களுடைய நேமுகத்தின் பேரிலேயேதான் வழமையில் இருக்கப்பட்டவர்கள் ஆனதால் அவர்கள் காஜியாகமாட்டார்கள் இஸ்லாமல்லாதவர் அதிகாரத்துக்குள் இருக்கப்பட்ட ஊரில் அவர்கள் ஜும்ஆவை நடத்துவது அந்த ஊர்காரர்கள் ஒத்துமையாக இருக்கப்பட்ட காரியஸ்தர் அல்லது காஜியின் உத்திரவில்லாமல் நடத்தக்கூடாது ஏனென்றால.

176486

றத்துல்முக்தார் என்கிற கிதாபில் சொல்கிறார். இவ்விதமான இடங்களில் காரியஸ்தர் சுல்த்தானைப்போலயாக இருக்கும். ஆகையால் அவனுடைய உத்திரவில்லாமல் ஜும்ஆவை நடத்துவது கூடாது. பின்பு சுல்தானில் நின்றும் உத்திரவு பெருவதை ஷருத்திடப்பட்டதொல்லாம் முந்தின விடுத்தத்தில்தான் ஆனதால் சுல்தான் ஒரு மனிதனுக்கு அதை நடத்த உத்திரவு கொடுத்தால் அந்தமனிதன் வேரே மனிதனுக்கு உத்திரவு கொடுக்கலாம் இதேபடி றத்துல்முக்தார் என்கிற கிதாபில் வந்திருக்கிறது அதாவது சுல்தானுடைய உத்திரவு பெற்றவன் அல்லது அவன்உத்திரவில் நின்றும உத்திரவு பெற்றவன் அந்த ஜும்ஆவை நடத்தவேணுமே தவிர ஒவ்வொரு கத்தீபும் அதைநடத்துவது கூடாது ஆனதால் இவ்விதமான இடங்களில் இப்படியேதான் இன்னும் பெருநாள் கிறது ஜும்ஆவைப் போலவா இருக்கும் ஏனென்றால் ஜும்ஆ தொழுகை வாஜிபானவன்பேரில் கொத்துபாவைத்தவிர ஜும்ஆவுடைய ஷாத்துகளைக்கொண்டு ஈது தொழுகையும் வாஜிபாகும் என்று றத்துல்முக்தார் என்கி

ற கிதாபிலும் வேறு கிதாபிலும் வந்திருக்கிறது ஆகையால் கே
ள்வியில் சொல்லப்பட்டவர்கள் ஜும்ஆதொழுகை பெருநாள்
தொழுகைகளை நடத்துவதும் எத்தீமான சிறு பிள்ளைகளுக்கு
நிகாஹுசெய்து வைப்பது கூடாது. ஆனால் இஸ்லாமல்லாதவர்
அதிகாரத்துக்குள் இருக்கும்படியான ஊர்களில் எல்லோரும் ஒத்
துமையாய் நேமிக்கப்பட்ட காரியஸ்தரும் காஜியும் எத்தீமான
சிறு பிள்ளைகளை நிக்காஹு முடித்துவைக்கத்தக்கவர்களாவார்
களா, என்றால், அதை நான் கிதாபுகளில் பார்க்கவில்லை என்கி
லும் இஸ்லாமானவர்கள் அவர்களில் நின்றும் ஒருவரின் பேரில்
எல்லோரும் ஒத்துமையாய் அவனைக்காரியஸ்தனுக்கி அவனை
அவர்களுக்கிடையில் தீர்ப்பு செய்யும்படியான காஜியாக ஆக்கு
வது இஸ்லாமானவர்கள்பேரில் வாஜிபென்று மேல்கடந்த பேச்
சுகளால் வெளியாகுறதாவது அவன்எத்தீமான சிறுபிள்ளையை
நிகாஹு முடித்துவைப்பதற்கு உடையக்காரனுவான் என்பதா
யிருக்கும், றத்துல் முக்தார் என்கிற கிதாபில் சொல்கிருர் இஸ்
லா மானவர்களுக்கு இஸ்லாமல்லாதராஜன் காஜியை நேமிப்ப
தை இஸ்லாமானவர்கள் அவனைஏற்றுக்கொண்டால்சந்தேகமன்
றி தேமுகம்சரியாகிவிடும் ஆகையால் அடிகாஜியைக் கொண்டு
ஜும்ஆ ஈது தொழுகை நடத்துவதும் எத்தீமான குழந்தைகளு
க்கு நிகாஹுசெய்து கொடுப்பதும் இஸ்லாமானவர்கள் அவனை
ஏற்றுக்கொள்கிற ஷருத்துக்கொண்டு ஆகும் பின்பு காஜியாக
நேமிக்கப்பட்டவன் பத்தினித்தனம், புத்தி, நல்லநடத்தை விள
க்கத்திலும் முஹம்மது நபியுடையசொல் அவர்சிஷியாள் உடை
யசொல் மார்க்க ஆதாரசட்டம் இதுகளைஅரிகிறதிலும் தீர்ச்சை
உள்ளவனென்று அரியப்பட்டவனாக இருக்கவேணும், இன்னு
ம் அவன் ஜினம், வன்மை, கோபம், வம்பத்தனம், பிடிவாத
ம் இல்லாதவனாக இருப்பது அவசியம் ஏனென்றால் முஹம்மது
நபியவர்களுடைய பிரதிநிதியாக இருக்கிருன் இந்தப்படி துற்று
ல் முக்தாரிலும் வேறு கிதாபுகளிலும வருகிறது' நான் சொல்
லிவந்ததை அறிந்தால் ஒவ்வொரு ஊர்க்காரர்களும் அந்த ஊரு
க்கு காரியதரிசியை பிரயாசைப்பட்டுதேடி நேமித்து அவனைக்
கொண்டு ஜும்ஆ ஈது தொழுகை நடத்துவதற்காகவும் எத்தீம்
களை கலியாணம்செய்துகொடுப்பதற்காகவும் அவர்கள்ஒத்துமை

யாக இருப்பது அவசியம்.

இன்னும் முஹம்மது நபி (ஸல்) சொல்

ஒரு மனிதன் தனக்கு இமாமை நியமித்துக்கொள்ளாமல் இறந்து விட்டால் மார்க்கவழியறியாத மரணத்தை அடைந்தான். பின்புநம்பள் தேசத்திலும ஒவ்வொரு பட்டணத்திலும பட்டிக்காட்டிலும பழயகாலத்தில் நேமிக்கப்பட்ட காரியதரிசி இல்லாமல் இருக்கவில்லை என்பது மரைவுள்ளதல்ல என்றாலும் இந்தக்காலத்தில் அந்த ஊர்க்கார்களுக்குள் ஒத்துமைக்குறைவு உண்டாகி காஜியாகக்காணப்படுவது ரொம்ப சொற்பமே.

ஆகையால் ஜும்ஆ ஈதுதொழுகை நடத்தாட்டு வதற்கும் எத்தீமுகளுக்கும்கலியாணம் செய்து கொடுப்பதற்கும் ஒரு காரியதருசியின்பேரில் ஒத்துமைபடுகிறது அவசியம், ஏனென்றால்காரியதருசி சுல்தானைப்போலாயிருக்கும் சுல்தான் ஒருவனல்லாதிருக்கப்படாது.

ஏனெனில், முஹம்மது நபி (ஸல்) சொல்.

இரண்டு பிரிதிநிதிக்கிக்கட்டுப்பட்டு நடக்க ஒப்புக்கொள்ளப்பட்டால் இருவரில் ஒருவரை வெட்டிபோடுங்கோ என்று அதுபோலவே காரியதருசியும் இருப்பதால்வேரு காரியதருசியை விட்டு விலக்கிக்கொள்ளவும் அல்லா நேருணதை ரொம்ப அரிந்தவன் இப்படிக்கி யெழுதியது அஹ்கருல்ஹிபாதுஷைகுயூசூசுபிப்பினு காதர்அஹமது ஜவாபுசரி அல்லா ரொம்ப அரிந்தவன் இது யெழுதியது அற்ருஜி அபுவறப்பிகில்கவி அபுல்ஹசனுத் முஹம்மது அப்துல்ஹைஹ தஜாவசல்லாஹு அன் [illegible] ல் ஜலிய்யாவல்கபிய்யி.

முற்றிற்று.

அல்லா ... ... கடவுள்

அவ்லா ... ... ஏற்றமானது

முகுத்தார்... ... பலதில்தெரிந்தெடுக்கப்பட்டது

ஹுக்கும் ... சட்டம்

ஹராம் ... ... மார்க்கத்தில் அதைசெய்யவே படாதென்று கண்டிப்பாய் விலக்கப்பட்டது

தஹஜ்ஜத்து ... இஷா தொழுகை தவிர இரவில் முழித்து தொழுகிறது.

முசாபிர் ... ... யாத்திரை வாசி

முக்கீம் ... ... உள்ளூரி லிருக்கப்பட்டவன் அல்லதுவெளியூரில் 15-நாள் இருக்கிறவன்.

தயம்மம் ... ... தண்ணீர் கிடைக்காத சமயத்தில் மண்ணைக்கொண்டு தேகசுத்தி அல்லது முகம் கை சுத்தி செய்வது

சிறுதுடக்கு ... கை, கால், முகம் வகையறா சுத்தம் செய்ய கடமைப் படுவது.

பெருந்துடக்கு ... தேகமுழுவதும் சுத்தம் செய்ய கடமை படுவது.

வாஜி ... ... காரியதருசி

மக்ரூஹ் தஹ்ரீம் ... ஹராமுக்கு அடுத்து விலக்கப்பட்டது.

வக்பு ... ... பொது சொத்து.

கலீபா ... ... பிரதிநிதி.

வலீ ... ... சொந்தக்காரன்.

ஜனாஸா ... ... பிரேதம்.

ஸுன்னத்து ... ... அத்தியாவசியம்.

உலமாக்கள் ... மார்க்க நிபுணர்கள்.

வஸிய்யத்து ... மரணகாலத்து உபதேசம்

தஸ்பீஹு ... ஸ்தோத்திரம்.

தஹ்லீலு ... இதுவும் ஒருவிதஸ்தோத்திரம்

கலிமா ... ... மூலமந்திரம்.

கத்தமுல் அன்பியா ... நபிகளுக்கு கத்தம் ஓதுவது.

கத்தமுல்யூனுஸ் ... யூனுசுக்கு கத்தம் ஓதுவது

கத்தமுல்குர்ஆன் ... குர்ஆன் கத்தம் ஓதுவது.

முதக்கத்திமீன் ... ஹிஜ்ரி 400 வருஷத்திற்கு முந்தின நிபுணர்கள்.

முத்த அக்கீரீன் ... ஹிஜிரி 600 வருஷத்திர்க்கு பிந்தின நீ புணார்கள்.

ஜியாரத்து ... இறந்தவர்களின் சமாதியை கண்டவன் அவர்களுக்கு புாதிஹா வகையறு ஓ துகிறது.

பிது அத்து ... நபி அவர்கள் காலத்தில் இல்லாதது.

மத்தன் ... ... மூலசெய்யுள்.

ஷரஹு ... ... கருத்துரை.

பத்வா ... ... மார்க்க அத்தார்டீஸ்களினுல் ஏற்பட்ட தீர்மானம்.

ஜாஹில் ... ... மடையன்.

ஹாஷியாகாறர் ... விரித்துரை எழுதுபவர்

ஹதீது ... ... மூஹம்மதுநபி (ஸல்) அவர்கள் சொல்.

இபாதத்து ... வணக்கம்.

ஹாமில்காரர் ... வியாக்கியானம் செய்பவர்.

மதுஹபு ... ஹனபி ஷாபி மாலிக் ஹம்பலீஎன்ற நா லுசமயங்களில் ஒன்று.

மிஷர்தேசம் ... ஈஜிப்டு தேசம்.

முப்த்தி ... ... மார்க்க அத்தார்டிஸ்களை கொண்டு தீ ர்ப்பு செய்கிறவர்.

ரிஸாலா ... ... ஒரேசங்கதியை குறித்து எழுதிய செ ய்யுள்.

எத்திம் ... ... தகப்பன் இல்லாத குழந்தை.

“ சைபுல் இஸ்லாம்,, சென்னை 1925 ஹு செப்டம்பர் மீ 19 உ சனிக்கிழமை பிரசுரத்தின் நகல்

பேஸ் இமாமுகளின் கேவல அந்தஸ்து.

பொதுவாக இந்தியாவிலும் சிறப்பாக தென் இந்தியாவிலுமுள்ள முஸ்லிம் சமுகத்தார் முக்கிய மார்க்க விதிகளை நிறைவேற்றவேண்டிய விதமென்னவென்பதை நன்குணர்ந்து அவ்விதிகளின்படிச் செய்யவேணுமென்ற அக்கரை யில்லாதவர்களாயிக்கிறார்களென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். உதாரணமாகத் தொழுகையானது இஸ்லாமார்க்க விதிகளில் ஈமானுக்குப் பின் முதன்மையானதும் முஸ்லிமை முஸ்லிமல்லாதாரை விட்டும் பாகுபாடு செய்து பஹிரங்கமாக அவனை முஸ்லிமென்று விளம்பரப்படுத்தக் கூடியதுமாகுமென்பதை அறியாத முஸ்லிம்கள் மிகச் சிலரேயிருக்கலாமென்றாலும், அதை விதிப்படி நிறைவேற்றவேண்டுமென்ற அக்கரையற்றவர்களே பெரும்பான்மையினர்களாகக் காணப்படுகின்றனரென்று சொல்ல வெட்கப்படவேண்டி யிருக்கிறது. பெரும்பான்மை யோர் தொழுகையை அதன் விதிப்படி நிறைவேற்றி அதன் முழுப்பலனையும் அடையவேணுமென்ற அக்கரையற்றவர் களாயிருப்பதாலேயே தொழுகையின் இமாமத்துக்கு யோக்கியதையற்றவர்களைப் பேஷ் இமாமாக நியமனஞ்செய்து அவர்களைப்பின் தொடர்ந்து தொழுகின்றனர் யோக்கியதையற்ற பேஷ் இமாமை நியமித்து அவரைப் பின்தொடர்ந்து தொழுவதால், தொழுகையினால் பெறக்கூடிய பலன்களில் எவ்வளவு கிடைக்காமல் தவறிப்போகின்றனவென்பதையும், எவ்வளவு தீங்கு விளைகின்றன வென்பதையும் உணர்ந்த எந்தமுஸ்லிமும் யோக்கியதை யில்லாத இமாமுடன் ஒருநாள் கூடத் தொழுக இஷ்டப்பட மாட்டானென்பது திண்ணம். சிறிதுகாலமாக நம் தமிழ்நாடு பலஊர்களிலிருந்தும் அந்தந்த ஊர்களின் பேஷ் இமாம்கள் கல்வியில்லாதவர்களாயிருப்பதுடன் குர்ஆன் ஷரீபின் ஆயத்துகளையும் ஒழுங்காக ஓதத்தெரியாதவர்களாயிருக்கின்றார்களென்றும், குர்ஆனின் பதங்களை உள்ளபடி உச்சரிக்க அவர்களின் நாவளைகிறதில்லையென்றும், இவ்வித அவலக்ஷணங்கள் அமையப் பெற்றிருப்பதுடன்

அவர்கள் பகிரங்கமாக வட்டிக்குப் பணங் கொடுத்து வாங்
குகிறார்களென்றும், சில இமாம்கள் கள்ளுச்சாராய மதுபானங்க
ளை வெகுபிரியமாகப் பாலைப்போல் குடித்துவருகிறார்களென்றும்,
இவர்களின் ஊர்பேர்கள் உள்பட, விவரமாக எழுதி நமக்கு அ
னுப்பி அவைகளைப் பத்திரிக்கையில் பிரசுரிக்கும்படி அநேகர்
வேண்டிக்கொண்டிருக்கின்றனர். அவைகளைப் பிரசுரிப்போமாயி
ன், நமது சமுகத்திற்கே இழிவைஉண்டுபண்ணுமென்று, அஞ்சி
அவ் வேராளமான கடிதங்களைப் பிரசுரிக்காமல்பையில் பத்திரப்
படுத்தி வைத்திருக்கிறோம். அக்கடிதங்களில் ஒன்று திருநெல்
வேலியைச் சேர்ந்த ஓர் குக்கிராமத்திலுள்ள பேஷ் இமாம் ஒ
ரு வருக்கு நிக்காஹ் நடத்துவதற்காகப் பல ஊர் ஜனங்கள் கூ
டியிருந்த சபையில் மணமகனாயிருந்த இமாம்சாகிப் அளவுக்கு
மிஞ்சிக் கள்ளைக்குடித்து விட்டு புத்தி தடுமாற்றம் கொண்டு அவ
ர்நடந்துகொண்ட இழிவானநடத்தைகளையும், அச்சபையில்கூடியி
ருந்த ஜமாத்தார்கள் அனைவர்களையும் தனதுகள்குடி தோழர்களை
ப் போலும் அங்கு காணப்பட்ட செம்பு முதலிய பாத்திரங்களைக்
கள்கலயங்களைப்போலும் மதித்து அவர் நடந்துகொண்ட அலங்
கோல நடைகளை விளக்கிக் கூறுகிறது. அவர் அவ்வாறு நடந்து
கொண்டது வெட்கமான காரியமாயினும், அவர் பின்னும் இமா
மாக இருக்க அவ்வூரார் சம்மதித்திருப்பதைப் பார்க்கிலும் அவ
மானமான காரியம் அவர்களுக்கு வேறில்லையெனக் கூறலாம். மா
யவரம்தாலூகா வைச் சேர்ந்த ஒருகிராம வாசி, தங்களூர் இமா
மசாகிப் வட்டிக்கிப்பணம் கொடுத்து வாங்குவதில் நாட்டுக்கோ
ட்டைச் செட்டிமார்களை ஜெயித்துவிட்டதாகவும், அவர் பின்
தொழுக இஷ்டப்படாதவர்கள் வெளியூருக்குப்போய் ஜும்ஆத்
தொழுது வருகிறார்களென்றும் எழுதியிருக்கிறார் இதனால் அவ்
வூர் நாட்டாண்மைமுதலிய பெரும்பாலர் அவருடைய இமாமத்
தை ஆதரிக்கிறார்களென்று விளங்கிறது. ஆதேமாயவரத்தைச் சே
ர்ந்த கிராமவாசி எழுதியுள்ள நிருபமொன்று இமாம் சாகிபு குர்
ஆன் ஷரீபைத் தப்பும் தவறுமாக ஓதுவதுடன், தனது உத்தி
யோகத்தை எந்த ஆலிம் மௌலுவிகள் வந்தாலும் விட்டுக்கொ
டுப்பதில்லை யென்ற விபத்தை விளக்கிக் கூறுகிறது எனவே, ந
மதுசமூகம் ஒற்றுமைக்குலைந்து சீர்கேடானநிலமையை அடைந்
திருப்பதற்குப் பலகாரணங்களிருப்பினும் பேஷ் இமாமுகள்

மேலே வர்ணிக்கப்பட்டுள்ள அம்ஸங்களைப் பெற்றிருப்பதும் ஒரு முக்கிய காரணமெனக் கூறலாம். இவ்வித அஞ்ஞான அவலக்ஷணம் கொண்ட பாஸிக்குகள் முன்னின்று தொழுகைவைக்கும் தொழுகையின்கதி என்னவாகுமென்பதை உணராத பலர் பேருக்குமட்டில் தொழுதால் போதுமெனக் கரு பாஸிக்கான இமாமுகளுக்கு ஆதரவளித்து ஜமாத்திலுள்ள சிதேவிகளான பலரின் தொழுகையையும் பழுதாக்கி எல்லா பாவங்களையும் அவர்கள் சுமந்துக் கொள்ளுகின்றனரெனத் தெரிகிறது. இஸ்லாத்தின் அடிப்படையான தொழுகை விஷயத்தில் இவ்வளவு அசட்டுத்தனமாயிருக்கும் ஜமாததார், இஸ்லாம் மார்க்க விஷயங்களையும் சமூக சீர்திருத்த விஷயங்களையும் கல்வி அபிவிருத்தி விஷயங்களையும் எங்கனம் கவனிக்கப்போகின்றனர். மேலும், தொழுகையானது கெட்ட காரியங்களைவிட்டும் அவனைநீக்கி தூய்மையானவனாக ஆக்கிவிடுமென்று ஆண்டவனுடைய திருமறையில் கூறப்பட்டிருக்கிறபடி, அநுபோகத்தில் காணப்படாமல், தொழுகிறவர்களே எல்லாப் பாவங்களையும் துணிவுடன் செய்பவர்களாகக் காணப்படுவதற்கு "மேலே கூறப்பட்டுள்ள பாஸிக்கான இமாமுகளுக்குப் பின்னின்று தொழுவதே முக்கிய காரணமாகும். எனவே, மார்க்க ஒழுக்கம் மார்க்க பக்தி, சமூக சீர்திருத்தம் முதலிய அம்ஸங்களில் தங்கள் ஊர் தலைசிறந்து விளங்கவேணுமென்ற அக்கரைகொண்ட முஸ்லிம் கனவான்கள் இவ்வித பாஸிக்கான இமாம்களை அவ்வேலையைவிட்டு அகற்றுவதற்கும், அவர்களுக்கு ஆதரவளிக்கும் முட்டாள் கூட்டத்தை அடக்குவதற்கும் அஞ்சாநெஞ்சத்துடன் முன் வரவேண்டியது அவர்களின் மார்க்கக் கடமையென்பதை மறக்கலாகாது. இமாமத்துஸ்தானம் எவ்வளவு பொருப்புள்ள உயர் பதவியென்பதைக் கவனிக்கவேண்டும். அது மிக முக்கியமானதாயிருந்தமைப்பற்றியே எம்பெருமானார் அவர்களின் காலத்தில் அக்காரியத்தை அவர்களே நேரில் செய்துவந்தார்கள். அவர்களுக்குப்பின் கிலாபத்பதவியை வகித்தகலீபாக்களே செய்துவந்தார்கள். அதற்குப் பின்னும் அக்காரியத்தைத் தக்க மஹான்களே செய்து வந்திருக்கிறார்களென்பது வெளிப்படை. அங்கனம் தக்க மகான்கள் இமாம்களாக நின்று தொழுகைவைப்பதால் அவர்களின் தூய்மையான ஹிருதயங்களில் ஆண்டவனது அருள் நிறைந்து அ

தன் பிரகாசம் அவர்களைப் பின்பற்றியவர்களின் ஹிருதயங்களில் தாக்கி அவர்களின் ஹிருதய இருளை நீக்கிப் பரிசுத்தமாக்குவதனால் அவர்களும் நாளடைவில் இமாமைப்போல் பரிசுத்தவான்களாக விளங்கினரென்பது உண்மை. அங்ஙனமிருக்க, இமாமத்துஸ்தானத்தின் அந்தஸ்து இன்னதென்றறிந்து கொள்ளாத மூட ஜமாத்துகள் குயவன் கையிலகப்பட்ட மாணிக்கத்தை, அதன் மரியாதையை அறியாமல் அவன் அதைத் தனது நாய் கழுத்தில் கட்டிவிட்டான் என்றதற்கேற்ப தகுதியற்ற மேலே கூறப்பட்ட மார்க்க விரோதச் செயலுடைய பாவிகளுக்கு இமாமத்துப் பதவியைக் கொடுத்து, அவர்களைப் பின்தொடர்ந்து நிற்பதால் அப்பாவிக்குகளின் அடாச் செயல்கள் காரணமாக அவர்கள்மீது இறக்கப்படும் ஆண்டவனுடைய கோபாக்கினியின் சுடர் அவர்களைப்பின் பற்றியவர்களின் ஹிருதயத்தில் தாக்கி அவர்களின் ஹிருதயத்திலுள்ள இருளை அதிகப்படுத்தி விடுகிறதெனலாம். ஆன்மைப்பற்றியே அவ்விதம் தொழுகிறவர்கள் பழைய துற்செயல்களை விடாமல் செய்துவருகிறவர்களாகக் காணப்படுகின்றனரெனக் கூறலாம். சிலர் மேலே கூறப்பட்டுள்ள ஆகாத செயலுடையவர்களுக்குப்பின் தொழுகலாமென்று பத்வா (மார்க்கத்தீர்பு) வினவுகின்றனர். அவ்விதருக்களுக்குமுப்திகள் மக்ரூஹுவுடன்தொழுகை கூடுமென்று பத்துவாக் கொடுத்துவிடுகின்றனர். அப்பத்துவாக்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு பாவிக்கான இமாமை ஆதரிக்கும் மூடக் கூடத்தார் எவ்வாறேனும் தொழுகைக் கூடிப்போகிறதல்லவா. ஆகையால் அவ்விமாமை எடுக்கப்படாதென வாதாட முன்வருகின்றனர் மக்ரூஹுடன் தொழுகை நிறைவேறுகிறதென்றால் என்ன, அதனாலென்ன கெடுதி ஏற்படுகிறதென்பதை அவர்கள் கவனித்துணர்வதில்லை. தொழுகை மக்ரூஹு, ஆனாலும், மேலே கூறப்பட்டுள்ள மார்க்க விரோதக் காரியங்களை அல்லது அதுபோன்ற வேறுகாரியங்களைச் செய்யும் பாவிக்குகளை இமாமாக வைத்துக்கொள்ள வேணுமெனச் சாதிக்கும் மூடக்கூட்டத்தார்களை நாம ஒருகேள்வி கேட்க விரும்புகிறோம், ஒருவனுக்கு விவாஹம் செய்வதற்காக குறிப்பிடப்பட்ட பெண், கை கால் நொண்டி, அல்லது செவிடு, குருடு, ஊமை, முதலிய அங்கப்பழுதான பிள்ளைகளைத்தான் பெருவாள். அங்கப் பழுதில்லாத

நல்ல பிள்ளையைப் பெறவேமாட்டாளென்று திட்டமாகத் தெரிந்தால் நல்ல பிள்ளை பெறக்கூடிய பெண் அவனுக்கு கிடைக்கக்கூடியதாயிருக்கும் நிலைமையில் மேலே குறிப்பிடப்பட்ட பெண், பிள்ளைபெற்றால் போதும். பிள்ளைகள் எவ்வித அங்கஹீனமானவைகளாயிருந்தாலும் சரி என்று நினைத்து அவளையே விவாஹம் செய்துகொள்ள எந்த மூடனும் விரும்புவானா? அத்தன்மையைப்போலவே தொழுகையில் மக்ரூஹ் ஏற்படுவதானது, மனிதனுடைய ஒருஅங்கம் பழுதாவதற்கொப்பாகுமென நமது மார்க்கம் கூறுகிறது. எனவே, நமது நாட்டில் பேஷ் இமாம்கள் விஷயத்தில் ஏற்பட்டுள்ள சீர்கேட்டை நிவர்த்திக்க மார்க்க பக்தியுள்ள முஸ்லிம் சகோதரர்கள் உடனே முன்வருவார்களென்று நம்புகிறோம்.

முற்றிற்று